# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## நாடகமும் அரங்கியலும் I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 8 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி 1

1. மனிதனை மோதுகை நிலையில் வைத்துப் பார்க்கும் கலை வடிவம் எது?

   1. இசை  2. நடனம்  3. நாடகம்  4. இலக்கியம்

2. ஈழத்துச் சிறுவர் நாடகத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் யார்?

   1. சி.ஜெய்சங்கர்  3. குழந்தை.ம.சண்முகலிங்கம்
   2. வேலு சரவணன்  4. எதிர் வீர சரச்சந்திரா

3. வாய்மொழிச்சித்திரிப்பு **இல்லாத** கலை வடிவம்

   1. ஊமம்  2. வானொலி நாடகம்  3. வில்லிசை  4. தொலைக்காட்சி நாடகம்

4. விழுமியப் பண்பு என்பதனுள் **அடங்காதது**

   1. பெரியோரை மதித்தல்  2. அன்பு காட்டுதல்  3. உதவி செய்தல்  4. சண்டை பிடித்தல்

5. கிராமியக் கலை வடிவமாக **அமையாதது**

   1. கும்மி  2. கரகம்  3. கோலாட்டம்  4. சிறுவர் நாடகம்

6. கதை ஒன்றினுள் உள்ளடங்காத விடயம்

   1. மோதுகை  2. காட்சிக்களம்  3. மேடைக்குறிப்பு  4. கரு

7. சொல்லாடல் என்பதைக் குறிக்கும் வேறு பதம்

   1. உரையாடல்  2. நடித்தல்  3. பாடுதல்  4. ஆடுதல்

8. நரம்புக்கருவிகளில் ஒன்று

   1. மிருதங்கம்  2. வீணை  3. தபேலா  4. புல்லாங்குழல்

9. புதிதளித்தலுக்கு அவசியமான திறன்களில் ஒன்று

   1. மனனம் செய்யும் திறன்  3. அழகிய தோற்றம்
   2. வாசிக்கும் திறன்  4. கற்பனை

10. நாடகத்தை வளர்ப்பதில் மிக முக்கிய பங்கு வகிப்பது

1. முரண் 2. இசை 3. நடனம் 4. நகைச்சுவை

11. வேடஉடை என்பது உள்ளடங்கும் சித்திரிப்பு

1.உடல்வழிச் சித்திரிப்பு 2. குரல்வழிச் சித்திரிப்பு
3. காண்பியவழிச் சித்திரிப்பு 4. உணர்ச்சிவழிச் சித்திரிப்பு

12. நாய்க்குட்டி ஊர்வலம், பிள்ளை அழுத கண்ணீர் ஆகிய சிறுவர் நாடகங்களை எழுதியோர் முறையே,

1.குழந்தை.ம.சண்முகலிங்கம்,சி.ஜெய்சங்கர் 2. மாவை நித்தியானந்தன்,சி.ஜெய்சங்கர்

3.சி.மௌனகுரு, வேலு சரவணன் 4. சி.ஜெய்சங்கர், வேலு சரவணன்

13. கூத்து ஆடப்படும் அரங்கு எவ்வாறு அழைக்கப்படும்?

1. களத்து மேடு 2. படச்சட்ட மேடை 3. வட்டக்களரி 4. கரளிய

14. "பண்பும் பயனும்" எனும் நாடகம் எவ்வகை நாடகம்?

1. சமூக நாடகம் 2. சிறுவர் நாடகம் 3. வரலாற்று நாடகம் 4. இசை நாடகம்

15.அரங்க விளையாட்டின் மூலம் விருத்தியடையக் கூடிய கற்றலுக்கு அவசியமான திறன் எது?

1. நினைவாற்றல் 2. மறதி 3. குறிப்பெடுத்தல் 4. பரீட்சை எழுதுதல்

16. பாத்திரச்சித்திரிப்பிற்கு அவசியமான குரற் பயிற்சிகளில் ஒன்றாக **அமையாதது**

1. சொல்லாடற் பயிற்சி2. ஒலியெழுப்புதல் 3. பாடல்கள் 4. அசைவுகள்

17. "அரசனின் புத்தாடை" எனும் நாடகம் எழுதப்பெற்ற ஆண்டு

1. 2003 2. 2008 3. 2010 4. 2009

18. நினைவாற்றலை மேம்படுத்த உதவும் அரங்க விளையாட்டு

1. ஆடும் வீடும் 3. பெயர்ச் சங்கிலி

2. பசுவும் புலியும் 4. நண்டு, இறால், மீன்



19.அருகில் காட்டப்பட்டுள்ள படம் குறித்து நிற்கும் உணர்வு

1. கவலை 2. பயம் 3. கோபம் 4. வெறுப்பு

20. படத்தில் காட்டப்பட்டுள்ள சிறுவர் நாடக ஆசிரியர்



1. சி.மௌனகுரு
2. மாவை நித்தியானந்தன்
3. வேலு சரவணன்
4. குழந்தை.ம.சண்முகலிங்கம்

(20x2=40புள்ளிகள்)

## பகுதி II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:**

1) 1. நாடக எழுத்துரு ஒன்றினை எழுதுபவர் யார்? (2 புள்ளிகள்)

2. நாடக எழுத்துரு ஒன்றில் காணப்படும் பிரதான மூலகங்கள் யாவை? (6 புள்ளிகள்)

3. நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் **நான்கு** தருக (4 புள்ளிகள்)

2) 1. நடிகனுக்கு வழங்கப்படும் அரங்கப் பயிற்சிகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

2. மொழியல்லா மொழி எனும் அரங்கப் பயிற்சியினைச் செய்வதன் மூலம் விருத்தியடையும் திறன்கள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

3. அரங்கப் பயிற்சியினால் நடிகன் பெறக்கூடிய பயன்கள் **ஐந்து** தருக. (5 புள்ளிகள்)

3) 1. பாடசாலை அரங்கு எனப்படுவது யாது? (3 புள்ளிகள்)

2. நீர் பார்த்து நயந்த பாடசாலை நாடகங்களில் காணப்பட்ட விழுமியப் பண்புகள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

3. பாடசாலை நாடகங்களின் பேசுபொருளாகக் காணப்பட்ட விடயங்கள் **ஐந்து** தருக? (5 புள்ளிகள்)

4) 1. நினைவாற்றல் என்பது உடலின் எவ்வுறுப்புடன் தொடர்புடையது? (1 புள்ளி)

2. அரங்க விளையாட்டுக்கள் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

3. நினைவாற்றலை விருத்தி செய்யக்கூடிய அரங்க விளையாட்டுக்கள் **நான்கு** தருக (4 புள்ளிகள்)

4. அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் கிடைக்கும் பயன்கள் **நான்கு** தருக? (4 புள்ளிகள்)

5) 1. அரசனின் புத்தாடை என்ற சிறுவர் நாடகத்தின் ஆசிரியர் யார்? (2 புள்ளிகள்)
2. இந் நாடகத்தின் கருப்பொருள் யாது? (2 புள்ளிகள்)
3. அந்நாடகத்தில் இடம்பெறும் நான்கு பாத்திரங்களைப் பட்டியற்படுத்துக? (4 புள்ளிகள்)
4. அரசனின் புத்தாடை நாடகத்தில் இடம்பெற்ற உமக்குப் பிடித்த பாடலொன்றை எழுதுக. (4 புள்ளிகள்)

**(12 X 5= 60 புள்ளிகள்)**